# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 நவம்பர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

IV. மனுக்கள்

V. கேள்விகள்

**01. கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2017.10.17 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/98)**

அ. கொழும்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்திற்கு உரிய உயிரியல் வைத்திய பொறியியலாளர் திருமதி. டயனா கௌஷனி ஆரியதாச என்பவர் தாபனத்தில் வருகை மற்றும் வெளிச் செல்லும் இடாப்பில் கையொப்பம் இடாது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் சம்பளத்தினை பெற்றுக் கொள்கின்றார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அக் காரியாலயத்திற்கு உரிய வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அலுவலகர் காரியாலயங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுக்கு அவசியமற்ற மேலதிக வைத்திய உபகரணங்கள் மற்றும் உரிய தரமற்ற உபகரணங்கள் அவரின் ஒத்துழைப்புடன் கொள்வனவு செய்யப்படுவதாக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

இ. i. உயிரியல் விஞ்ஞான பொறியியல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள PE 6817 ஆம் இலக்க கெப் வண்டி அவரின் தனிப்பட்ட விடயத்திற்காக முறையற்ற ரீதியில் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிவீர்களா ? இது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

ii. உயிரியல் வைத்திய உபகரணங்களை வழங்கும் தாபனம் ஒன்றினால் கையூடல் ஒன்றாக வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், அது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனையும் அறிவீர்களா ? அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

iii. இச் சுற்றுலாவானது தாபனக் கோவைக்கு முரணானதும், ஒழுங்கான அங்கீகாரம் ஒன்று இல்லாது 2014.08.28 ஆந் திகதி தொடக்கம் 2014.09.03 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் இடம்பெற்றுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iv. இது தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2017.10.17 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/99)**

அ. 2017 பெப்ரவரி மாதம் 07 ஆந் திகதி மற்றும் அமப/17/105/742 ஆம் இலக்க அமைச்சரவையின் முடிவிற்கு இணங்க அதிபர்களுக்காக இது வரை செலுத்தப்பட்ட படி திருத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதற்கிணங்க கல்வி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்தில் 2017.0314 ஆந் திகதி 16/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அச் சுற்றறிக்கைக்கு இணங்க 2017 மார்ச் மாதம் தொடக்கம் திருத்தப்பட்ட படி செலுத்தப்பட வேண்டும் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 06 மாதங்களைத் தாண்டியுள்ள போதும் எக் காரணத்தினால் அப் படியானது இது வரை செலுத்தப்படவில்லை ?

உ. அது அந் நிலுவைப் படியுடன் எப்போது செலுத்தப்படும் ?

**03.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2017.10.17 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/101)**

அ. மே/மா நீர்கொழும்பு கல்வி வலயத்தின் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் மேல் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. இப் பாடசாலைகளுள் இம் முறை க.பொ.த சான்றிதழ்களுக்கு இணங்க மேல் மாகாண பாடசாலைகளில் க.பொ.த. (சா/த) முடிவுகளில் சித்திபெற்ற சதவீதம் எவ்வளவு ? தேசிய பாடசாலைகளில் சித்திபெற்ற சதவீதம் எவ்வளவு ?

இ. நாடு முழுவதுமான இம் முறை க.பொ.த (சா/த) முடிவுகளுடன் ஒப்பிடும் போது மேல் மாகாணம் எத்தனையாவது இடத்தில் இருக்கின்றது. ?

ஈ. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இம் முறை க.பொ.த. (சா/த) முடிவுகளில் மேல் மாகாணம் குறைந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இது தொடர்பாக உடனடியாக கவனத்தைச் செலுத்தி மாகாணத்தின் மாகாண பாடசாலைகளின் முடிவுகளை உயர்த்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஊ. வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து இது தொடர்பான விடயங்களை வினவுவீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ சுனில் ஜயமினி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு: (Îæ/vi (1)17/102)**

அ. 2017.05.15 ஆந் திகதி லீசிங் முறையின் கீழ் மேல் மாகாண சபைக்கு எத்தனை வாகனங்கள் மாதாந்த வாடகையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன ?

ஆ. அவ் வாகனங்களை வெவ்வேறாக டபல் கெப், மோட்டார் கார், வேன் ஆக குறிப்பிட இயலுமா ?

இ. ஒவ்வொரு வாகனத்திற்குமான மாதாந்த வாடகை எவ்வளவு ?

ஈ. இவ் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட்டதா ?

உ. முன்வந்த தாபனங்களின் எண்ணிக்கை எத்தனை ?

ஊ. கேள்வி கிடைத்த தாபனத்தின் பெயர் முகவரி என்ன ?

எ. கேள்வி கிடைத்த தாபனத்தின் தவிசாளர், பணிப்பாளர் சபையின் பெயர்களை சபைக்கு வெளியிட முடியுமா ?

ஏ. வாகனத்திற்காக சாரதி, எண்ணை, சிறு பராமரிப்பு நடவடிக்கை என்பன மாகாண சபையினால் வழங்கப்பட வேண்டும் என்பதனை அறிவீர்களா ?

ஐ. உடன்படிக்கைக்கு இணங்க இவ் வாகனங்கள் 5 வருடங்களில் ஆரம்ப உரிமையாளருக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதனை அறிவீர்களா ?

ஒ. மொத்தமாக இவ் வாகனங்களை ஆரம்ப உரிமையாளருக்கு ஒப்படைக்கும் போது ஐந்து வருடங்களில் 19 கோடியை விட அதிகளவு நிதி ஒன்றை நிறுவனத்திற்கு செலுத்திய பின்னர் மாகாண சபைக்கு 10 கோடி அளவு நஷ்டம் ஒன்று ஏற்படும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஓ. இத் தவறினைத் திருத்த நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஔ. இல்லையாயின் ஏன் ?

**05. கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/103)**

அ. மேல் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள அத்துடன் / அல்லது அதற்குப் புறம்பாக காணப்படும் மொத்த முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை தொடர்பாக கணக்கெடுப்பு ஒன்று காணப்படுகின்றதா ? அப்படியாயின் அதன் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. மேல் மாகாணத்தினுள் காணப்படும் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு ? சுமாராக எத்தனை ?

இ. 2017 ஆம் ஆண்டினுள் போக்குவரத்து அமைச்சினால் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்தல் / ஒழுங்கு படுத்தல் அத்துடன் / அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதா ?

ஈ. குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்தல் / ஒழுங்குபடுத்துதல் பொலிசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா ?

உ. அவ்வாறான பதிவுகளை மேற் கொள்வதற்கு பிரதேச செயலாளர் காரியாலயம் அல்லது உள்ளூராட்சித் தாபனங்கள் காணப்படும் போது மேலே (ஈ) இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்காக பொலிசுக்கு அனுப்புவது தவறான முன்னுதாரணம் ஒன்று என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**06. கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/104)**

அ. மேல் மாகாணத்தினுள் முச்சக்கர வண்டிளை செலுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அதனால் எதிர்ப்பார்த்த பலாபலன் கிடைக்கப் பெறவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. உரிய நடவடிக்கை ஒன்று இல்லாதும் சரியான ஒழுங்குபடுத்தல் இடம்பெறாமையும் காரணமாக முச்சக்கர வண்டி செலுத்தும் தொழில் சமூக பிரச்சினை ஒன்றாக மாறியுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

இ. முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டங்களில் குறைபாடு ஒன்று காணப்படுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அக் குறைபாடுகளை பூரணப்படுத்தும் வரை முச்சக்கர வண்டிகளின் ஒழுங்குபடுத்தலுக்காக மேல் மாகாணத்தினுள் உறுதியான கொள்கை ஒன்றினை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிகாட்டல் ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு ஒழுங்குபடுத்தல் தாபனம் ஒன்றினை ஸ்தாபிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**07. கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு,**

**மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/105)**

அ. i. பியகம பிரதேச சபையினால் புறநெகும செயற்றிட்டத்தின் கீழ் மாவரமண்டிய பொதுக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்ட்டம் ஒன்றுக்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

ii. உள்ளூராட்சி அமைச்சு இதற்காக எவ்வளவு நிதியை செலவு செய்துள்ளது ?

iii. பியகமை பிரதேச சபையின் நிதியத்தில் இதற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

ஆ. i. பியகம பிரதேச சபைக்கு உரிய மாகொலை பல்வகைக் கட்டடத்திற்காக இவ்வேளையில் எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

ii. மாகாண சபையினால் இக் கட்டடத்திற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

iii. பிரதேச சபையினால் இக் கட்ட்டத்திற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

**08. கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/106)**

அ. i. பியகமை தேர்தல் தொகுதியில் எத்தனை மாகாண சபை வீதிகள் காணப்படுகின்றன ?

ii. அவ் வீதிகள் யாவை ?

iii. அவ் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 2016/2017 ஆம் ஆண்டுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

iv. அந் நிதி எவ்வளவு ?

ஆ. i. தரனகமை வெலந்தாம்பிட வீதியில் பாலம் ஒன்றை கட்டுவதற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதா ?

ii. அந் நிதி எவ்வளவு ?

iii. அப் பாலத்தை எவ்வளவு காலத்தில் பூர்த்தி செய்ய இயலும் ?

**09. கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/107)**

அ. களனி கல்லி வலயத்தின் மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அங்கு காணப்படும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. இவ் வலயத்தினுள் 2017 ஆம் ஆண்டில் மாகாண பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. சித்தியெய்திய எண்ணிக்கை எவ்வளவு ?

உ. சித்தியெய்தாத எண்ணிக்கை எவ்வளவு ?

ஊ. சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத எண்ணிக்கை சதவீதமாக எவ்வளவு ?

எ. இப் பரீட்சையில் 70 புள்ளிகளை விட அதிகமாக பெற்றுக் கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஏ. 70 புள்ளிகளை விட குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஐ. பியகம கல்வி வலயத்தில் 2017 புலமைப் பரிசில் பரீட்சை முடிவிற்கு இணங்க 1, 2, 3 இடங்களைப் பெற்ற பாடசாலைகள் என்ன ?

ஒ. பியகம கல்வி வலயத்தின் பாடசாலைகளினது புலமைப்பரிசில் முடிவு எப்படி ?

**10.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/108)**

அ. மேல் மாகாண சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் கிடைக்கப் பெற்று பிரதேச செயலாளர் காரியாலயங்களில் மாகாண சபை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக விடுமுறை நாட்களில் கடமையில் ஈடுபட்டதற்காக படி ஒன்று வழங்கப்பட்டது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. இவ் வேளையில் அப் படியானது சில தாபனங்களில் வெட்டப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. மோட்டார் சைக்கில் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு அப் படியினை வெட்டியதை நீங்கள் அங்கீகரிக்கின்றீர்களா ?

ஈ. அவ்வாறு விடுமுறை நாட்களில் பெருமளவு சேவையினையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக அப் படியினை மீண்டும் வழங்க நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

உ. இல்லையாயின் ஏன் ?

**11.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/109)**

அ. மேல் மாகாண சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் கிடைக்கப் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக ரூபா 500/- தொலைபேசிப் படி ஒன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அத் தொலைபேசிப் படியானது சில தாபனங்களில் உத்தியோகத்தர்களுக்காக இவ் வேளையில் வழங்கப்படவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. அவர்கள் கடமையாற்றும் தாபனங்களின் தலைவர்கள் சேவை நிலையத் தொலைபேசிகளில் அழைப்புக்களை எடுக்க அவ் உத்தியோகத்தருக்கு இடம் வழங்காதபடியால் அப் படியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**12.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/110)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவினுள் இயங்கும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 67 உடங்காவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம அபிவிருத்தி சங்கத்தின் 2017 ஆம் ஆண்டிற்கு உரிய பதவிகளுக்கு இணங்க அலுவலகர்களின் பெயர் முகவரியினை வெவ்வேறாக சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

இ. இவ் வருடம் உள்ளடங்கலாக கடந்த ஐந்து வருட காலத்திற்காக இச் சங்கத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அரசின் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. அச் செயற்றிட்டங்களின் எண்ணிக்கைக்கு இணங்க (5%) ஆக சங்கத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு ?

உ. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இச் சங்கத்தின் மூலம் கிராமத்தின் அபிவிருத்திக்காக மேற்கொண்டுள்ள சேவைகள் யாவை ?

ஊ. அச் சங்கத்தின் 2016, 2015, 2014, 2013, 2012 ஆண்டுகளுக்கு உரிய வருடாந்த அறிக்கைகள் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை இச் சபைக்கு சமரப்பிப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**13.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/111)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 71 திம்பிரிகஸ்கட்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம அபிவிருத்தி சங்கங்கத்தில் 2017 ஆம் ஆண்டிற்கு உரிய உத்தியோகபூர்வ பதவிகளுக்கு இணங்க உத்தியோகத்தர்களின் பெயர் முகவரியினை வெவ்வேறாக சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

ஆ. இவ் வருடம் உள்ளடங்கலாக கடந்த ஐந்து வருட காலத்திற்காக இச் சங்கத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அரசின் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. அச் செயற்றிட்டங்களின் எண்ணிக்கைக்கு இணங்க (5%) ஆக சங்கத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இச் சங்கத்தின் மூலம் கிராமத்தின் அபிவிருத்திக்காக மேற்கொண்டுள்ள சேவைகள் யாவை ?

உ. அச் சங்கத்தின் 2016, 2015, 2014, 2013, 2012 ஆண்டுகளுக்கு உரிய வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை இச் சபைக்கு சமரப்பிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :**

**பிரேரணை** :

2017.10.19 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கைச் செயற்குழுக் கூட்ட முடிவிற்கு இணங்க இன்றைய தினம் (2017.11.07 ஆந் திகதி) கலைந்து சென்ற பின்னர் இச் சபை 2017.11.14 ஆந் திகதி மு.ப 09.30 க்கு, கூட வேண்டியதுடன், அந்த மேலதிக கூட்ட தினம் (2017.11.14) ஆந் திகதி மேல் மாகாண மாகாண சபையின் புதிய நடவடிக்கை ஒழுங்கு விதித் தொகுதியினை அங்கீகரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தினமாக வேண்டும்."

## X. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ சுமித்லால் மென்திஸ் - சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக சேவைகள், சமூக நலன்புரி நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் மற்றும் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

**<u>மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை</u>**
**(சட்டமூலம்)**

மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை சட்டமூலம் அரசின் அமைச்சரவையிற்கு சமர்ப்பித்த பின்னர், அதனை மாகாண சபைகளின் அங்கீகாரத்திற்காக முன்வைக்குமாறு அமைச்சரவையில் இருந்து ஆலோசனைக் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அதற்கிணங்க இவ் ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை இம் மேல் மாகாண மாகாண சபைக்கு அங்கீகாரத்திற்காக முன்வைத்து உரிய அங்கீகாரத்துடன் மீண்டும் அரசின் அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு அறிவித்து அச் செயலாளரினால்

அனுப்பப்பட்டிருந்த **PL/10G/08/15** ஆம் இலக்க 2017.05.27 ஆந் திகதி கடிதம் தொடர்பாக 2017.06.21 ஆந் திகதி நடைபெற்ற இம் மேல் மாகாண மாகாண சபையின் சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவில் கலந்துரையாடி வரப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க, இந்த ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக மேலும் தீர்மானத்தை எடுப்பதற்கு 2017.09.20 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. அன்றைய தினம் மற்றும் 2017.09.27 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாணத்தின் அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் ஒழுக்க விதிக் கோவை சட்டமூலத்தை கலந்துரையாடி மாகாண சபைக்கு சமர்ப்பித்து மாகாண சபையின் இணக்கத்தினைப் பெற்றுக் கொண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிப்பது சிறந்தது என அங்கீகாரம் கிடைத்த படியால் இந்த ஒழுக்கவிதிக் கோவை சட்டமூலம் 2017.10.17 ஆந் திகதி இம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இச் சட்டமூலம் தொடர்பாக இம் மேல் மாகாண சபையில் கலந்துரையாடி இம் மாகாண சபையினால் எடுக்கப்படும் முடிவினை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது.

(சட்டமூலம் 2017.10.17 ஆந் திகதி நிகழ்ச்சி நிரலுடன் எல்லா கௌரவ உறுப்பினர்களுக்கும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.)

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்

பௌத்த சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் மற்றும் அழிந்து சென்ற பாரம்பரிய கலாச்சாரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நடாத்தப்படும் பெரஹரைகளுக்காக யானைகள் அவசியமா என மஹா சங்கத்தினர் மற்றும் அந்தந்த பெரஹரைகளை நடாத்தும் குழுக்களுடன் வினவி அதற்குத் தேவையான யானைகளை வழங்குவதற்குத் தேவையான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/07)**

### 02. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய 2 மாவட்டங்களுக்கு உரிய பிரதேசத்தில் அமைந்துள்ள போல்கொட கங்கை எனவும், ஆறு எனவும் அழைக்கப்படும் ஈர நிலப் பகுதியானது மாகாணத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய பெறுமதி மிக்க வளம் ஒன்றாகும், பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியில் இந்த ஈர நில அமைப்பு தற்போது பல்வேறுபட்ட அழிவுகளுக்கு உட்பட்டு

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்பு இல்லாத எந்தவொரு நிர்வாக தாபனத்தினதும் நேரடி அபிவிருத்தி ஒன்றுக்கு பங்களிப்புச் செய்யப்படாது கைவிடப்பட்டுள்ள வளம் ஒன்றாக மாறியுள்ளது. நன்நீர் மீன் வளர்ப்பு, மாகாண சுற்றுலா வியாபாரம், பொருட் போக்குவரத்து, ஈர நிலத்தினை அண்டியதான மருந்து, மருந்துச் செடிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி நிலைமையைப் போசிக்கக் கூடிய பல வகையான பெறுமதி மிக்க வளம் ஒன்றாக உபயோகத்திற்கு எடுக்கக் கூடிய இந்த சுற்றாடல் அமைப்பு தொடர்பாக விரிவான விஞ்ஞான ரீதியிலான கணிப்பின் பின்னர் நிர்வாகத் தாபனம் ஒன்றினை இணைத்து போல்கொட ஈர நிலப் பகுதியின் நன்மைக்காக அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/08)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.10.19 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)

மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.